

# பனிமயம்

## மார்ச் 2026

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-



# இயேசுவின் பாடுகளில் நம் தாய்



# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அன்பு மக்களே, வணக்கம். நலந்தானா?

கடவுள் கிருபையில் இரண்டு மாதங்கள் கடந்தோடிவிட்டன. புதிய மாதத்தைக் காணச் செய்த கடவுளுக்கு நன்றி கூறுவோம். திருக்குடும்பத்தின் பாதுகாவலராம் புனித சூசையப்பருக்கு என்று அர்ப்பணிக்கப்பட்ட இந்த மாதத்தில் உங்களுடைய குடும்பங்களை ஒப்புக்கொடுத்து ஜெபிக்கிறேன். நீங்களும் உங்களுடைய குடும்பங்களையும், நம் பங்கு என்கிற குடும்பத்தையும், புனித சூசையப்பருக்கு ஒப்புக்கொடுத்து ஜெபியுங்கள். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

மார்ச் மாதம் முழுவதும் நம் ஆண்டவர் இயேசுவின் பாடுகளைத் தியானிக்கின்ற, பாடுகளில் நம் ஜெப, தபங்கள் வழியாக பங்கெடுக்கின்ற மாதம். எனவே அருளின் காலம் என அழைக்கப்படுகின்ற இந்த தவக்காலத்தில் நமது பேராலயத்திலும் மற்றும் பனிமயம் வாசகர்கள் உங்கள் ஊர்களில் உள்ள ஆலயங்களிலும் நடைபெறக்கூடிய அனைத்து வழிபாடுகளிலும் தவறாமல் பங்கெடுத்து இறையாசீரை நிறைவாக பெற்றுக்கொள்ள வேண்டுகின்றேன்.

கடந்த ஆண்டுகளில் தவக்காலங்களில் வெறும் பக்திமுயற்சிகளுக்கும், வழிபாடுகளுக்கும் மட்டுமே முக்கியத்துவம் கொடுத்துவிட்டு மனித உறவுகளுக்கு அடிப்படையாக விளங்குகின்ற காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் போயிருந்தால் அதைக்குறித்து கவனமாயிருப்போம். எசாயா 58:5ல் சொல்லப்பட்டிருப்பது போல சாம்பல் பூசுவதும், நாணலைப் போல தன்னை தாழ்த்திக் கொள்வதும் மட்டுமல்ல தவக்காலம். மன்னிப்புக்கும், பிறரன்பு பணிகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதையும் தவக்காலத்தில் ஆண்டவர் அதிகம் எதிர்பார்க்கின்றார் என்பதை மறவாதீர்கள்.

இயேசு சிலுவையில் தொங்கியபொழுது அறிந்து குற்றம் செய்து தன்னை சிலுவையில் அறைந்தவர்களுக்காகவும், தந்தையே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் என்று மன்னிப்பு மன்றாடினாரே அந்த ஆண்டவரின் சீடர்கள் என்பதை மனதில் கொண்டவர்களாகவும், அந்த சிலுவையிலிருந்து வழிந்தோடிய இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்கள் என்பதையும் மனதில் கொண்டு குடும்பங்களில், சமூகத்தில் ஒருவர் மற்றவரை மன்னித்து உறவோடு வாழ்வோம். இத்தவக்காலத்தில் நம் பாவங்களுக்காக பரித்தியாகங்கள் மேற்கொள்வோம். தானதர்மங்கள் அதிகம் செய்வோம், அத்தோடு ஆன்மீக காரியங்களிலும் வழிபாடுகளிலும் பங்கெடுத்து இறையருளைப் பெற்று வாழ்வோம்.

God Bless You All.

என்றும் பாசத்துடன்

**அருள்பணி. ஸ்டார்வின்**

திருத்தல அதிபர் & பங்குத் தந்தை



உதயம் 27 தாரகை 7

நிர்வாகி & வெளியிடுபவர்
அருள்பணி. ஸ்டார்வின்
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருள்பணி. ஸ்டார்வின்

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 100

முகவரி : 'பனிமயம்'
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
✆ 82209 47823, www.snowsbasilica.com

**இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து**

**ஆயுதக் குறைப்பு மற்றும் அமைதிக்காக...**

பயன்தரும் வகையில் ஆயுதக் குறைப்பை, குறிப்பாக அணு ஆயுதக் குறைப்பை நோக்கி, நாடுகள் பயணிக்கவும் உலகத் தலைவர்கள் வன்முறைக்குப் பதிலாக உரையாடல் மற்றும் அரசியல் விவேக பாதையைத் தேர்ந்தெடுக்கவும் நாம் இறைவேண்டல் செய்வோம்.

## உள்ளே...

மரியன்னையின் திருப்பெயர்கள் 4
இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் 6
தரிசனம் தருவாய் தாயே... 8
மாண்புறும் பெண்கள் 10
இம்மாதப் புனிதர் 11
மாண்புறும் மகளிர் 12
மாண்புறும் பெண்மையைப் போற்றுவோம் 14
மகளிர் - மனிதர்களுள் மாண்புடையோர் 16
விவிலியப் போட்டி 18
பனிமயப் பகிர்வு 21
புனித வாரத் திருநிகழ்வுகள் - 2026 22

2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் பனிமயம் இதழின் ஆண்டுச் சந்தா ரூ. 100

# மரியன்னையின் திருப்பெயர்கள்



## 43 அமல உற்பவியான அரசி!

மரியா "அமல உற்பவியான அரசி" (Queen Conceived without original sin) என்பது நெடிய மரபார்ந்த ஒரு திருப்பெயர். மரியன்னை தொடர்பான நான்கு நம்பிக்கைப் பேருண்மைகளுள் (Marian Dogmas) ஒன்றுதான் அன்னை மரியா அமல உற்பவி என்பது. இறைமகனாம் இயேசுவைத் தம் உதரத்தில் தாங்கவிருப்பதால், கடவுள் அவருக்கு சிறப்பான அருளை வழங்கி, அதனால் அவர் பிறப்புநிலைப் பாவம் இன்றி கருவானார், பிறந்தார் என்பதே இதன் பொருள். இது நம்பிக்கைப் பேருண்மையாக 1854ஆம் ஆண்டு திருத்தந்தை ஒன்பதாம் பயஸ் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இருப்பினும், திருஅவையின் தொடக்க காலத்திலிருந்தே இது இறைமக்களின் நம்பிக்கையாக இருந்து வந்திருக்கிறது.

அரசர்க்கெல்லாம் அரசரான இயேசுவின் தாய் என்பதால் அவர் அரசி என்று அழைக்கப்படுகிறார். விண்ணகத்தில் அவர் மதிப்புறு மாண்படைவதாலும் அவருக்கு அரசி என்னும் பெயர் பொருத்தமானதே. தம் மகனுடன் இணைந்து நம்மை ஆள்வதாலும் அரசி என அவரை அழைப்பது பொருத்தமானதே.

இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடான "திருஅவை" (Lumen Gentium) மீட்பின் திட்டத்தில் மரியாவின் பங்கைப் பற்றிப் பெருமையாகப் பேசுகிறது. இந்த உலகை மீட்பது பற்றிய இறைத் திட்டத்தில் மரியாவுக்கும் இடம் இருக்கிறது. எனவேதான், மரியா உற்பவிக்கும் முன்னரே கடவுள் அவருக்கு சிறப்பான அருளை அருளி, அவரைப் பிறப்புநிலைப் பாவத்திலிருந்து விடுவித்தார் என்கிறது இந்த ஏடு.

ஆங்கிலிக்கன் சபையிலிருந்து விலகி, கத்தோலிக்கராக மாறி, பின்னர் புனிதராக உயர்த்தப்பட்ட ஜான் ஹென்றி நியூமன் மரியன்னையின் மேன்மைகளைப் பற்றி விரிவாக எழுதினார். குறிப்பாக, ஆங்கிலிக்கன் போன்ற பிரிந்த சபையினரின் முறைப்பாடுகளுக்கு விளக்கம் தரும் வண்ணம் கத்தோலிக்க நம்பிக்கைகளை அவர் விளக்கினார். இறைவனின் மகனான இயேசுவின் தாயான மரியா ஒரு கணமும் சாத்தானின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவராக இருக்க முடியாதல்லவா? எனவேதான், கடவுள் அவருக்கு சிறப்பான அருளை வழங்கி, கருவிலேயே பிறப்புநிலைப் பாவமின்றிப் பிறக்கச் செய்தார் என்று வாதிட்டார் நியூமன்.

மரியாவும் இயேசுவால்தான் மீட்கப்பட்டார். ஆனால், மற்ற அனைவரையும் தமது இரத்தத்தால் கழுவி மீட்டார் என்றால், தம் தாயான மரியாவைப் பாவத்திலிருந்து பாதுகாத்து மீட்டார் என்பது நியூமனின் பார்வை. திருஅவையின் தொடக்கத்தில் இருந்தே இந்த நம்பிக்கை நிலவி வந்தது. காலம் செல்லச் செல்ல நம்பிக்கைப் பேருண்மையாக மலர்ந்தது என்கிறார் புனித நியூமன். ★



# 44 விண்ணேற்படைந்த அரசி!

மரியாவின் மன்றாட்டு மாலையின் இறுதிப் பகுதியில் மரியா "விண்ணேற்படைந்த அரசி" (Queen assumed into heaven) என்னும் திருப் பெயரைச் சொல்லி நாம் அன்னையை மன்றாடுகிறோம். இதுவும் மரியன்னை தொடர்பான நான்கு நம்பிக்கைப் பேருண்மைகளோடு (Marian Dogmas) தொடர்புடையதே. மரியா உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகம் எடுத்துக் கொள்ளப்பட்டார் என்பதே இறுதியாக, அதாவது 1954ஆம் ஆண்டில் திருத்தந்தை 12ஆம் பயஸ் அவர்களால் பிரகடனப் படுத்தப்பட்ட நம்பிக்கைப் பேருண்மை.




திருவெளிப்பாடு நூலில் பலகாட்சிகள் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று "வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது; பெண் ஒருவர் காணப்பட்டார்; அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார்; நிலா அவருடைய காலடியில் இருந்தது; அவர் பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூடியிருந்தார்" (திவெ 12:1). இது அன்னை மரியாவைக் குறிக்கிறது என்பதே திருஅவைத் தந்தையர் அனைவரின் ஒருமித்த கருத்து.

இயேசுவைத் தம் உதரத்தில் தாங்கிய பேற்றினை மரியா பெற்றிருப்பதால், அவரது உடல் அழிவுற இறைவன் அனுமதிக்கவில்லை என்பதே இந்த நம்பிக்கைப் பேருண்மையின் பின்புலத்தில் உள்ள இறையியல். இரண்டாம் வத்திக்கான சங்க ஏடான "திருஅவை" (Lumen Gentium) மரியாவின் அமலஉற்பவம், அவரது விண்ணேற்பு இரண்டையும் இறையியல் பார்வையில் அருமையாக இணைக்கிறது. பிறப்புநிலைப் பாவமின்றிப் பிறந்த மரியா, தம் வாழ்வின் இறுதியில் உடலோடும், ஆன்மாவோடும் விண்ணக மாட்சிக்குள் எடுத்துக்கொள்ளப் பட்டு, அனைத்தின் மேலும் அரசியாகக் கடவுளால் உயர்த்தப்பட்டார் என்கிறது இவ்வேடு (திருஅவை எண் 59).

உடல் அழியாமலே சாவைச் சந்திக்கும் அனுபவம் விவிலியத்திற்குப் புதிதில்லை. முதல் நூலான தொடக்கநூலிலேயே இவ்வனுபவம் பெற்ற ஒரு மனிதரை நாம் சந்திக்கின்றோம். "ஏனோக்கு கடவுளோடு நடந்து கொண்டிருந்தான். பின்பு அவனைக் காணவில்லை. ஏனெனில் கடவுள் அவனை எடுத்துக்கொண்டார்" (தொநூ 5:24) என்பதுதான் அவரைப் பற்றிப் பதிவு செய்யப்பட்டுள்ள வியப்பான செய்தி. அதுபோலவே, இறைவாக்கினர் எலியாவும் இறப்பைச் சந்திக்காமல் விண்ணகம் எடுத்துக் கொள்ளப்பட்டார். "எலியாவும், எலிசாவும் உரையாடிக் கொண்டு வழிநடந்து செல்கையில், எலியா சுழற்காற்றில் விண்ணகத்துக்குச் சென்றார். அதற்குமேல் அவரால் (எலிசா) அவரைக் காண முடியவில்லை" (2 அர 2: 11-12).

எளிய மனிதர்களான ஏனோக்கும், எலியாவும் விண்ணகம் எடுத்துக்கொள்ளப் பட்டார்களென்றால், இறைமகனுக்கே அன்னையான மரியாவுக்குக் கடவுள் ஏன் அந்த அருளை வழங்கமாட்டார் என்பதுதான் திருமறைத் தந்தையரின் வாதம்.



அருள்பணி. குமார்ராஜா

# இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்



## மாண்புறும் மகளிர்

மனிதர் கடவுளின் சாயல்.

'மனிதர்' என்றால் யார்?

மனிதர் 'கடவுளின் உருவில்' படைக்கப் பட்டவர்.

தம்மைப் படைத்தவரை அறிந்து அவருக்கு அன்பு செய்ய அவர்களால் இயலும். கடவுளின் மாட்சிக்காக மண்ணில் உள்ள அனைத்தையும் அவர்கள் ஆளவும் பயன்படுத்தவும், அவை யாவற்றின் தலைவர்களாகக் கடவுள் அவர்களை ஆக்கினார்...... "உமது கை படைத்தவற்றை அவர்கள் ஆளும்படி செய்துள்ளீர். எல்லாவற்றையும் அவர்கள் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தியுள்ளீர்" (திபா 8:4-6) எனத் திருமறை நூல் கற்பிக்கிறது.

ஆனால், கடவுள் மனிதரைத் தனியாகப் படைக்கவில்லை. ஏனெனில், தொடக்கத்தில் இருந்தே "ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்" (தொநூ 1:27). அவர்களுடைய கூட்டு வாழ்க்கை மனித ஆள்களிடையே எழும் ஒன்றிப்பின் முதல் வெளிப்பாடாகும். ஏனெனில், புனிதர் தம் ஆழ்ந்த இயல்பிலேயே சமூகப் பண்புடையவர்கள், பிறரோடு உறவு கொள்ளாமல் அவர்களால் வாழவோ, தம் திறமைகளை வளர்த்துக் கொள்ளவோ முடியாது. எனவேதான், மீண்டும் விவிலியத்தில் நாம் படிப்பதுபோல், "கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன" (தொநூ 1:11) - இன்றைய உலகில் திருச்சபை எண். 12.

✴ மனிதகுலம், படைப்பின் மேல் தன் ஆதிக்கத்தை நாளும் வலுப்படுத்த முடியும். இவ்வாறு வலுப்படுத்தவும் வேண்டும் எனும் உறுதிப்பாடு வளர்ந்து வருகிறது.

இதன் விளைவாக, தாம் பெற வேண்டிய நலன்கள் நீதியின்மையாலும், சமமற்ற பங்கீட்டாலும் தம்மிடமிருந்து பறிக்கப் பட்டுள்ளதாகத் திட்டவட்டமாகக் கருதுபவர் பலர். அந்நலன்களைப் பெற தீவிரமாய்க் கோருகின்றனர்.

பசியால் அவதியுறும் மக்கள் செல்வர்களை இடைமறித்து முறையிடுகின்றனர். ஆண்களோடு பெண்களுக்கும் சம உரிமை கொடுக்கப்படாத இடங்களில் சட்டத்தின் முன்பும் நடைமுறையிலும் சமஉரிமை பெற பெண்கள் கோருகின்றனர்.


பண்பாட்டிலிருந்து பிறக்கும் பின் விளைவுகள் உண்மையில் அனைத்து மனிதருக்கும் கிடைக்க முடியும். அவ்வாறு கிடைக்கவும் வேண்டும் என்பதை இன்று மனித வரலாற்றிலே முதல்முறையாக எல்லா மக்களும் உறுதியாக நம்புகின்றனர். - இ.உ.தி. எண். 9.

✳ ஒவ்வொரு மனிதருக்கும், மக்கள் யாவருக்கும் பயன்பட வேண்டும் என்பதற்காகவே கடவுள் மண்ணுலகையும் அதில் உள்ள அனைத்தையும் ஆக்கினார். எனவே, படைப்பு நலன்கள் அனைத்தும் நீதியை வழிகாட்டியாகவும் அன்பைத் துணையாகவும் கொண்டு, அடிப்படையில் சரிசமமாக எல்லா மனிதருக்கும் சென்று சேர வேண்டும்...... உடைமையைக் கொண்டிருக்கும் முறை எதுவானாலும் சரி, மண்ணுலகின் நலன்கள் அனைத்து மனிதருக்கும் பொதுவானவை என்பதை எல்லாரும் கருத்தில் கொள்ள வேண்டும்.

“உலக நலன்கள் அனைவருக்கும் பொதுவானவை என்னும் தத்துவம் இச்சமுதாயங்களில் ஓரளவு செயலாக்கம் பெறுகிறது. இக்காலப் புதுத் தேவைகளை நிறைவு செய்யாத சில பழக்கவழக்கங்கள் மாற்றப்படவே முடியாது என்னும் எண்ணத்தைத் தவிர்க்க வேண்டும்” - இ.உ.தி. எண். 69.

தொகுத்தளிப்பவர் :

**கலாபன் வாஸ்**




## வரவேற்கிறோம்



### திருமுழுக்குப் பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 3. | ஸ்நோ ஸ்டேனிட்டா | ஜெஸ்டஸ் - இன்பென்டா | 08.02.2026 | அன்னை தெரசா |
| 4. | இன்ஃபன்ட் ஷார்வின் | வெலிங்டன் - ஷியாமினி | 15.02.2026 | இரக்கத்தின் மாதா |
| 5. | இவான் | சராண் - இன்பென்டா | 15.02.2026 | சிந்தாயாத்திரை மாதா |

# தரிசனம் தருவாய் தாயே...

## மரியன்னை காட்சிகள் பற்றிய தொடர் 7

மெக்சிகோ நகரிலுள்ள ஆயர் சுமராகாவின் இல்லம். கடந்தமுறை பார்த்த அதே பிரம்மாண்டம், அதே பணியாளர்கள். ஆயரைச் சந்திப்பதற்காக அதே அறைக்குமுன் அமைதியாக அமர்ந்திருந்தார் யுவான். வழக்கமான அதே ஏளனங்களையும் கிண்டல்களையும் அனுபவித்தபோதும் இம்முறை யுவான் டியேகோவுக்கு அவை பெரிதாக ஒரு பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

பல மணி நேரக் காத்திருப்பிற்குப் பின்னர், ஆயரின் கடைக்கண் பார்வை கிடைத்தது. ஆயரைச் சந்தித்ததும், கொஞ்சமும் தாமதிக்காமல் அவரது கால்களில் விழுந்தார் யுவான். கண்ணீர் அவரது கண்களிலிருந்து கொப்பளித்தது. பேச முடியாமல் நா தடுமாறியது. உடல் நடுங்கியது. முழந்தாள்படியிட்டு ஆயரின் கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டார். ஏற்கெனவே சொன்னதுபோல அன்னையின் ஆசைப்படி ஆலயம் கட்டவேண்டும் என்று சொல்லித் தேம்பித் தேம்பி அழுதார்.

இம்முறை ஆயர் அவரைக் கேள்விகளால் துளைத்தெடுத்தார். அன்னையைப் பார்த்த இடம் எது? அன்னை அணிந்திருந்த ஆடை எப்படி இருந்தது? அன்னையின் குரல் எப்படி இருந்தது? உண்மையிலேயே நீ பார்த்தது அன்னை மரியாவைத் தானா? ஆலயம் கட்டவேண்டும் என்று அன்னை சொன்னது உண்மைதானா? எனத் தொடர் கேள்விகள். அனைத்திற்கும் அழுகையோடே பதிலளித்தார் யுவான்.

கடைசியாக ஆயர் சொன்னார்: “மகனே, நீ சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் உன் வார்த்தைகள் மட்டும் போதாது. அடுத்தமுறை அன்னை உன்னைச் சந்தித்தால் நான் நம்புமாறு ஏதாவது ஓர் அடையாளத்தைக் கேள். அதைமட்டும் நீ வாங்கி வந்துவிட்டால் நீ சொல்வதை நான் முழுமையாக நம்புகிறேன். ஆலயம் கட்டவும் ஏற்பாடு செய்கிறேன்”. ஒப்புக்குச் சொல்லி வைத்தார் ஆயர் சுமராகா. யுவான் டியேகோவின் முகத்தில் மகிழ்ச்சி. அப்படி ஒரு பிரகாசம். அடையாளம் தானே, ஆண்டவரே, கட்டாயம் வாங்கி வருகிறேன். எப்படியோ அன்னையின் விருப்பம் நிறைவேற வேண்டும். அதுவே எனக்குப் போதும்”. சொல்லிவிட்டு வேகமாக வெளியேறினார்.

ஆயர் சுமராகாவிற்கு இன்னும் சந்தேகம் தீர்ந்தபாடில்லை. படிப்பறிவற்ற ஒரு பாமரப் பழங்குடி மனிதனிடம் தான் ஏமாந்துவிடக் கூடாது என்பதில் தெளிவாக இருந்தார். உடனடியாக இரு பணியாளர்களை அழைத்தார். யுவான் டியேகோவைப் பின்தொடர்ந்து செல்லுமாறு ஆணையிட்டார். அவர் யார்? எங்கேயிருந்து வருகின்றார்? அவரை யாராவது தூண்டி விடுகின்றார்களா? அவர் பின்னாலேயே சென்று இதையெல்லாம் தெரிந்துகொண்டு வருமாறு பணித்தார். அவர்களும் மறைவாகப் பின்தொடர்ந்தார்கள்.

எல்லாம் நன்றாகப் போய்க்கொண்டிருந்த போது திடீரென அது நடந்தது. அன்னை காட்சி தந்த தெப்பியக் நகரின் மலைக்கு மிக அருகிலுள்ள ஒரு பாலத்தைக் கடக்கும்போது திடீர் மேகமூட்டம். அவர்களது பார்வையை முற்றிலும் மறைக்கும் வண்ணம் திடீரென்று கும்மிருட்டு. இருட்டை விலக்கிவிட்டு யுவான் டியேகோவைத் தேடினார்கள் அப்பணியாளர்கள். அவரைக்



கண்டுபிடிக்கவே முடியவில்லை. கோபத்தோடு திரும்பிய அவர்கள் ஆயரிடம் "யுவான் ஒரு ஏமாற்றுக்காரன். அவன் சொல்வது அனைத்தும் கற்பனை. அவனை இனியும் நீங்கள் சந்தித்துப் பேசவோ, அவனது சொற்களை நம்பவோ வேண்டாம்" என்று தீர்க்கமாகச் சொன்னார்கள்.

நடந்தது எதையும் அறியாமல் அன்னை காட்சி தந்த மலையை நோக்கி வேகமாக நடந்துகொண்டிருந்தார் யுவான் டியேகோ. அன்னையும் தன் அன்பு மகனுக்காக அதே இடத்தில் ஒளிவெள்ளத்தில் அமைதியின் அரசியாகக் காத்திருந்தார். அன்னையைப் பார்த்ததும், அவரது தாள்பணிந்து வணங்கிவிட்டு, நடந்தது அனைத்தையும் சொன்னார் யுவான்.

"ஆயர் கேட்பதுபோல ஓர் அடையாளத்தை மட்டும் தாருங்கள், தாயே. என் உயிரைக் கொடுத்தாவது உங்கள் விருப்பத்தை நான் நிறைவேற்றுகின்றேன்" ஆர்வத்தோடும் பணிவோடும் அன்னையிடம் பேசினார் யுவான். "கவலைப்படாதே, என் அன்பு மகனே, யுவானிட்டோ. நாளை இதே இடத்திற்கு மீண்டும் வா. ஆயர் நம்புமாறு ஓர் அடையாளத்தை நான் கட்டாயம் தருகின்றேன். எனக்காக நீ எடுக்கும் இந்த முயற்சிகளுக்காக என் அன்பு மகனின் ஆசி நிச்சயம் உனக்கு உண்டு" நம்பிக்கையூட்டி அனுப்பிவைத்தார் அன்னை.

அன்னையைப் பணிந்து வணங்கிவிட்டு, தன் இல்லம் திரும்பினார் யுவான் டியேகோ. போகின்ற வழியிலேயே அவருக்கு அடுத்த சோதனை காத்திருந்தது. அவருக்கென இருந்த ஒரே உறவாகிய அவருடைய மாமா யுவான் பெர்னார்டினோவுக்குக் கடுமையான காய்ச்சல். மிக மோசமாகத் துன்புற்று, படுத்த படுக்கையாய்க் கிடந்தார் அவர். தனக்குத் தெரிந்த கை மருத்துவம் அனைத்தையும் தன் மாமாவுக்குச் செய்து பார்த்தார் யுவான். எதுவும் பலனளிக்கவில்லை. கிராமத்து மருத்துவரையும் அழைத்து வந்தார். அவரும் தன் பங்கிற்கு சில மூலிகை வைத்தியங்களைச் செய்து பார்த்தார். எந்தப் பயனுமில்லை.

தன் மாமா இறப்பின் விளிம்பில் இருப்பதை யுவான் உணர்ந்தார். தன் மனைவியின் இறப்புக்குப் பிறகு, இந்த உலகில் தனக்கென இருந்த ஒரே உறவும் பிரியப் போகிறதே என்ற கவலை இரவு முழுவதும் யுவான் டியேகோவைத் தூங்க விடவில்லை. இறக்கும் முன் தன் மாமாவுக்கு எப்படியாவது நோயில்பூசுதல் அருள்சாதனம் வழங்க வேண்டும் என எண்ணினார்.

அதிகாலையிலேயே எழுந்தார். மெக்சிகோ சென்று அருள்பணியாளரை அழைத்து வரவேண்டும் என்ற எண்ணத்தோடு நடக்கத் தொடங்கினார்.


அப்போதுதான் வியப்பூட்டும் அந்த நிகழ்வு நடந்தது. அது என்ன? அறிந்துகொள்ளக் காத்திருங்கள் அடுத்த இதழ் வரை.......



**அருள்பணி.**
**க.செ. பிரவீன் ராசு**

**அடுத்த மாத இதழ்,**
**"மகிழ்வு தரும் உயிர்ப்பு"**
**எனும் தலைப்பில்**
**உயிர்ப்புப் பெருவிழா**
**சிறப்பிதழாக**
**வெளிவருகின்றது.**
**படைப்புகள்**
**வரவேற்கப்படுகின்றன.**





# மாண்புறும் பெண்கள்..

(பெண்கள் தினக் கவிதை)

மாண்புறும் பெண்களை முன்னே நிறுத்தி
மனிதம் வளர்ப்போம்.. வையகம் செழிக்கும்..
காணும் பொருளெலாம் எங்கும் பெண்மையே..
கண்விரி விழிகளும் கூர்மையே!.. ஆனதால்
பெண்களைப் பேணுவோம் .. வாழ்வினில் உயர்வோம்..
விழிக்குள் ஒளிரும் கதிர்களோ தீக்கதிர்
எண்களின் வல்லமை போன்றதே பெண்மையும்...
எண்ணித் துணிவீர்.. பெண்மையைப் போற்றுவீர்.

கருவறைத் தெய்வங்கள்.. வானொளிர் சுடர்கள்..
கனவுகள் தேக்கியே நனவுகள் ஆக்கிடும்
பொறுப்புடை வித்தகர்.. தீமையை எரித்தே
பொன்பொருள் செய்யும் புதுமைகள் அறிந்தோர்..
வெறுப்பினை விதைக்கும் தீயவர் கண்டிடின்
நெருப்பில் எரித்தே பொசுக்கவும் கற்றவர்..
செருக்குடன் இவர்முன் மனிதர் தோன்றிடின்..
தோன்றிய மனிதர் தோல்வியே காண்பர்..

தனித்த உலகினை தாய்மையால் வென்றவர்..
தந்தையாய் தாயாய் குருதிக் கொடையால்!!
செனித்த நாளினில் தன்னுயிர் தனக்கின்றி..
கருவினில் வளர்த்த தாய்மையின் இலக்கணம்..
மனிதகுலத்தின் மாண்புறும் பெண்களே! நீவிர்..
தனித்தல்ல பூமிப்பந்தே உம்மைப் பொருளே..
மனிதமாண்பின் உடனுறை மீட்பர் அன்னைமரியும்
உம்முடன் வதிவாள்.. வாழ்வீர்! வாழ்வாங்கு..

**சேயூரான்..**
(ஜோஸப் ஜவஹர். G)





# இம்மாதப் புனிதர்

## புனித பேட்ரிக்




புனித பேட்ரிக் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் பிரிட்டனில் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தார். இவர் இளமைக் காலத்தில் இறை நம்பிக்கையில் அதிக ஈடுபாடு கொண்டவராக இல்லை. தனது 16 வயதில் அயர்லாந்து கடற் கொள்ளையர்களால் கடத்தப்பட்டு, அடிமையாக அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு மலைப் பகுதியில் ஆடு மேய்க்கும் கடுமையான வாழ்க்கையை அனுபவித்தார். குளிர், பசி, தனிமை மற்றும் துன்பம் ஆகியவற்றின் நடுவில் அவர் இறைவனை ஆழமாகத் தேட ஆரம்பித்தார்.

தினமும் பலமுறை செபித்தார். அவரது மனம் இறைவனையே நாடியது. இந்த துன்பக்காலமே இவரது வாழ்க்கையின் ஆன்மீக திருப்புமுனையாக அமைந்தது. ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு இறைவன் இவருக்கும் அயர்லாந்திலிருந்து தப்பிச் செல்லும் வழியை இவருக்குக் கனவில் காட்டினார். இவர் 300 கி.மீ. நீண்ட தூரம் நடந்து ஒரு கப்பலில் ஏறி தாய்நாட்டிற்குத் திரும்பினார்.

வீட்டிற்குத் திரும்பிய பின் அவர் அமைதியாக வாழவில்லை. மீண்டும் ஒரு கனவில் இறைவன் 'அயர்லாந்து மக்களிடம் திரும்பி வா' என்ற அழைப்பை உணர்ந்தார். இந்த அனுபவம் வாயிலாக மறைப்பரப்பின் அழைப்பை உணர்ந்தார். பின்னர் குருத்துவக் கல்வியை முடித்து, குருவாக திருநிலைப் படுத்தப்பட்டார். அதன்பிறகு, ஆயராகவும் திருநிலைப்படுத்தப்பட்டார்.

இறுதியில், தன்னை ஒரு காலத்தில் அடிமைப்படுத்திய அயர்லாந்து நாட்டிற்கே மறைப்பரப்பாளராக திரும்பிச் சென்றார். இது புனிதரின் மன்னிக்கும் மனதையும், இறைவனுக்கான முழு அர்ப்பணிப்பையும் காட்டுகிறது. அயர்லாந்தில் மக்களிடம் அன்போடு நற்செய்தியை அறிவித்தார்.

அங்கு மக்களிடம் பல தெய்வங்களை வணங்கும் பழக்கம் இருந்தது. இருந்த போதிலும் மிக பொறுமையுடனும், அறிவுத் தெளிவுடனும் கிறிஸ்தவ நம்பிக்கையை மக்களுக்கு போதித்தார். ஆயிரக்கணக்கான மக்களுக்கு திருமுழுக்கு அளித்தார். மூவொரு கடவுளைப் பற்றி மக்களுக்கு புரிதலை ஏற்படுத்த ஷாம்ராக் இலையை எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தினார்.

தனது பணியில் பல எதிர்ப்புகளும், ஆபத்துகளும் இருந்தபோதிலும் அவற்றை மிகுந்த மனதைரியத்துடன் மேற்கொண்டார். தன்னையே தாழ்த்தி எப்போதும் "இறைவனின் அருளே என்னை வழி நடத்துகிறது" என்று கூறினார். புனித பேட்ரிக் கி.பி. 461ஆம் ஆண்டு மார்ச் 17 அன்று விண்ணகப் பிறப்படைந்தார். தனது அயராத பணியினால் அயர்லாந்தில் கிறிஸ்தவ நம்பிக்கை வலுவடைந்தது. இவர் "அயர்லாந்தின் இறைத்தூதர்" என்று அழைக்கப்படுகிறார்.



அருள்சகோ. மிக்கேல் அருள்ராஜ்

# மாண்புறும் மகளிர்

ஆண்டவரின் படைப்பில் மிக அழகான படைப்பு பெண். மகளிர் மாண்புறச் செய்வது தாய்மை. கருவறை முதல் கல்லறை வரை ஒவ்வொரு மனிதனின் பின்புலத்திலும் பெண்கள் பங்கு மிகையானது. மகளாக, சகோதரியாக, தாயாக, பாட்டியாக உருவெடுப்பவள் பெண். எபிரேய வாரத்தை "Issa" என்றால் பெண் என்று பொருள்.

"ஆணின் விலா எலும்பிலிருந்து எடுக்கப்பட்டதால் இவள் பெண் என்று அழைக்கப்படுவாள். இவள் எலும்பின் எலும்பும், சதையின் சதையும் ஆவாள்." (தொநூ 2:2,3) ஆணும் பெண்ணும் சமம் என்று உணர்த்தவே கடவுளின் படைப்பு இருந்தது.



ஆண்களை விட பெண்கள் கல்வியிலும், திறமையிலும், வலிமையிலும் அறிவிலும் உயர்ந்திருந்தாலும் ஆண்களின் பாதுகாப்பு பெண்களுக்கு மிகவும் தேவை. குடும்பம் முதல் பணிபுரியும் இடம் வரை பெண்கள் மீது ஆண்கள் பலவிதமான எதிர்மறை எண்ணங்களை உருவாக்குகின்றனர்.

ஆண்களுக்கு ஈடாக பெண்கள் தொழில்கள் பல புரிகின்றனர். இந்திய பெண்மணி சுனிதா வில்லியம்ஸ் சர்வதேச விண்வெளி நிலையத்தில் 286 நாள்கள் தங்கியிருந்து பத்திரமாக பூமிக்கு திரும்பியுள்ளார். பெண்கள் மீது திணிக்கப்பட்ட வேலைப்பளு, வேலைக்கு தகுந்த ஊதியமின்மை போன்ற அவலங்களுக்காக பல போராட்டங்களுக்குப் பின்னர் 1967 இல் ஐ.நா. பல தீர்மானங்கள் நிறைவேற்றியது.. 2019 பாலின தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டாலும் நியாயமான தீர்ப்பு கிடைப்பதில்லை.

"ஆட்சியாளரே! நீவீர் வழங்கும் தீர்ப்பு உண்மையில் நீதியானதா? மாந்தர்க்கு நேர்மையுடன் தீர்ப்பு வழங்குகிறீரா? நீங்கள் அநீதிக்கு உடந்தையாய் இருக்கிறீர்கள்" (திபா 58;1,2). யூத மக்களிடையே பெண்களை மதிப்பதில்லை. அவர்களுக்கு நியாயமான தீர்ப்பு கிடைப்பதில்லை. இன்றும் அதே நிலையா? என்று எண்ணத் தோன்றுகிறது. பெண்ணிற்கோ, பெண் குழந்தைக்களுக்கோ பாதுகாப்பு இல்லை.

உயிர்களை உருவாக்கி, அவர்களை நல்வழியில் வளர்த்து உலகில் மேன்மைப்பட வைப்பதே பெண்ணின் அறச்செயல். கணவர் கடவுள் நம்பிக்கை இல்லாதவராக இருந்தாலும் தன் மகன் திமொத்தேயு திருச்சபையின் வலுவான பணியாளராக புனித பவுலடியாருடன் இறைப்பணியாற்றச் செய்தவர் அவர் தாய். தீய நாட்டத்தில் சென்ற மகன் அகுஸ்தினாரை தன் செபத்தினால் புனிதர் ஆக்கிய தாய் புனித மோனிக்கா.

"எல்லா குழந்தைகளும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே



நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலே” எனவே தாயானவள் குழந்தைகளுக்கு நல்லொழுக்கங்களைக் குழந்தையிலிருந்தே கற்றுத் தர வேண்டும்.

“குற்றம் செய்தால் தண்டனை கிடைக்கும் என்ற அச்சமே அவனைப் பண்பட்டவனாக வைத்திருக்கிறது.” - அறிஞர் அண்ணா.

பெண்ணாகப் பிறந்திட மாதவம் செய்திடல் வேண்டுமம்மா! என்பர். விவிலியத்தில் தெபோரா இறைவாக்கு உரைப்பதிலும் (நீத 4:4), மிரியம் இசையிலும் (விப 15:20), எஸ்தர் அரசி (2:17) தன் இனத்தை காப்பாற்றுவதிலும் சிறந்து விளங்கினர். இயேசுவின் பாடுகளின்போது வெரோணிக்கம்மாள் இயேசுவின் இரத்தம் தோய்ந்த முகத்தை துடைத்து, மீட்படைகிறாள் அவளது துணிச்சல் பாராட்டுக்குரியது. லாசர் குடும்பத்தில் மரியா நல்ல பங்கை தேர்ந்து கொண்டாள் என்று இயேசுவால் பாராட்டப்படுகிறாள். நற்செய்தியை முதலில் அறிவித்த மகதலா மரியா பேறு பெற்றவள். திருச்சபையில் பல புனிதையரை காணலாம்.

“பெண், பெண்மையும் மேன்மையும் நிறைந்த படைப்பு” –அண்ணல் காந்தி

தாய்மைக்கு இலக்கணமாய் திகழ்பவர் அன்னை மரியா. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, நமக்காக ஒரு மீட்பரைப் பெற்றுத்தர எத்தகைய போராட்டங்களை மேற்கொண்டிருப்பார்? தூய ஆவியினால் அருள் மிகப்பெற்று கடவுளின் தாயாக நமக்கெல்லாம் அன்னையாக நமக்காக பரிந்துரைக்கின்றார். மாண்புறு மகளிராக அவரே திகழ்கின்றார்.

“அறிவின் தாயகமாய் அருள் நிறைந்த உள்ளமாய் இருப்பவள் தாய்” - ஜெயகாந்தன்.. அன்னை இருக்கும் இல்லம் ஆனந்தம் நடமாடும் ஆலயம்தானே! அன்னை திரு அவையின் தாய், தலைமைப் பண்பில் சிறந்தவள் வீரத்தின் விளைநிலம். அன்று கானாவூர் திருமணத்தில் குறைகளை நிறைவாக்குவதோடு அல்லாமல் இன்றும் குழந்தைப்பேறு இல்லாது கண்ணீர் விடும் மக்களின் குறைகளை நிறைவாக்குபவர். தன்னைத் தேடி வருபவர்க்கு தன் மகனிடம் பரிந்து பேசி பெற்றுத் தருபவர். “பெண்களுக்கு ஏற்ற அணிகலன்கள் நற்செயல்களே” (1திமொ 2:11,12).

“அன்னையை வணங்காது உயர்வில்லை; அவள் அடி தொழாது சிறப்பில்லை” என்கிறார் கவிஞர். “எனக்கொரு தாய் இருக்கின்றார், என்றும் என்னை காக்கின்றார்” என்ற மன உறுதியுடன் வாழ்வை எதிர்கொள்வோம்! மகத்தான மகளிர் தினத்தை (மார்ச் 8) மகிழ்வோடு கொண்டாடுவோம்!



**ரோஸ் சேவியர்**

## ஆசி கூறுகின்றோம்



### திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 5. | ஜியாஸ் விக்னேஷ் - ஷீபா | பவுலடியார் | 06.02.2026 |
| 6. | ஜேம்ஸ் –அந்தோணி சிந்தாத்திரை மேக்சிமினா | அந்தோனியார் | 16.02.2026 |



# மாண்புறும் பெண்மையைப் போற்றுவோம்

கலைகளில் சிறந்திடுவோம். நித்தம் காவியம் படைத்திடுவோம். சாதனையாளர் நாமென எழுவோம் என்பதனை உண்மையாக்கிக் கொண்டிருக்கும் பெண்கள் அன்று சமையல் அறையில் அடைந்து கிடத்தார்கள். இன்றோ ஆட்டோ ஓட்டுநர் முதல் விமானத்தை இயக்குபவர் வரை பெண்கள் ஆண்களுக்கு நிகராக, சரி சமமாக தலைநிமிர்ந்து நிற்கின்றார்கள் என்பது நாமறிந்த உண்மை. ஆதியிலே இறைவன் இவ்வுலகை மீட்கும் கருவியாக, பெண்களுள் பேறுபெற்றவளான அன்னை மரியாவைத் தெரிந்தெடுத்தபோதே மகளிர் மாண்பு உயர ஆரம்பித்துவிட்டது. விவிலியத்திலும், இலக்கியத்திலும் பெண்களின் மாண்பு தொடர்ந்தது. சமுதாயத்திலும் அன்பிற்கு அன்னை தெரசா, ஆட்சிக்கு பிரதமர் இந்திராகாந்தி, காவலுக்கு கிரண்பேடி, மருத்துவத்துக்கு டாக்டர் முத்துலட்சுமி, கலைக்கு கவிக்குயில் சரோஜினி, வீரத்திற்கு கல்பனாசாவ்லா, விளையாட்டுக்கு பி.வி. சிந்து.... இப்படி அடுக்கிக்கொண்டே போகும் அளவிற்கு பெண்கள் சாதனைகளைப் படைத்துக் கொண்டே இருக்கின்றார்கள். படிப்பு, பதவி, பட்டங்கள், புகழ்ச்சி இவற்றையெல்லாம் தாண்டி மகளாக, சகோதரியாக, மனைவியாக, நம்மிடையை உலாவி வரும் பெண்களின் மாண்பு 'தாய்மை' என்ற நிலையில் உச்சக்கட்டத்தில் இருக்கின்றது.

தன் உயிரைத் துச்சமாக வைத்து ஒரு **புதுப்பிறப்பைத்** தரும் **மறுபிறப்பாக** மாறும்



தாய்மைக்கு நிகர் இவ்வுலகில் வேறு என்ன இருக்கிறது?

திருத்தந்தை பத்தாம் பத்திநாதர் திருத்தந்தையாகத் தேர்வு செய்யப்பட்டபோது தன் மோதிரத்தைத் தன் அன்னையிடம் காட்டி, தான் 'திருச்சபைக்கே தலைவர்' என்ற பொறுப்பில் இருப்பதை மகிழ்வுடன் தெரிவித்தார். ஆனால், அவர் அன்னையோ தன் விரலில் அணிந்திருந்த திருமண மோதிரத்தை இறைத்தந்தையிடம் சுட்டிக்காட்டி, "மகனே! இந்த மோதிரம் இல்லையேல் உந்தன் மோதிரம் உங்களுக்குக் கிடைத்திருக்காது" என்றாராம். தாய்மைப் பேறு அத்துணை மகத்துவம் வாய்ந்தது.

அத்தாய்மையின் மாண்போ கர்வமுற்றதாக அமையாமல், தாழ்ச்சியில் நிறைவு பெறுகிறது. தியாகத்தின் சின்னமாக உலகில் உலவி வருகின்றது.

அன்னையர் தினத்தைக் கொண்டாட விரும்பிய ஒரு அன்னையின் பிள்ளைகள். பல்வேறு இடங்களில் வசித்து வருபவர்கள், தங்கள் அன்னை வாழும் இல்லத்திற்கு ஒரு வாரம் முன்னதாக வருகின்றார்கள். சகோதர, சகோதரிகள் பாசத்துடன் உறவாடுகின்றார்கள். தோழியரைக் காணச் செல்கின்றார்கள். அன்னையோ தன் மக்களுக்கும், மக்களின் மக்களுக்கும் சலிப்படையாது மகிழ்வோடு சமைத்துக் கொடுக்கின்றார்கள். அன்னையர் தினத்தன்று சுற்றுலாவிற்கு சென்று அன்னையர் விழாவைக் கொண்டாட பிள்ளைகள் திட்டமிடுகின்றார்கள். முன்தினம் இரவு, அன்னை வகைவகையான சாதங்கள், நொறுக்குத் தீனிகள் பண்டங்கள் என்று விழித்திருந்து சமைக்கிறார். கதிரவன் உதிக்கும் காலைப்பொழுதில் எல்லாரும் சுற்றுலா செல்ல வாகனத்தில் ஏறுகின்றார்கள். வாகனத்தில் ஒருவருக்கு மட்டும் இடமில்லை. யாரை விட்டுச் செல்வது, ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு யாராவது ஒருவர் வாகனத்தில் இருந்து இறங்குவார்களா? என எதிர்பார்க்கின்றார்கள். தந்தைகூட இறங்கவில்லை. தாயோ இறங்கி, அவர்களை அனுப்பி வைக்கிறாள். அவள் கண்கள் குளமாகி நிற்கின்றன. அன்னையர் தினத்தினைக் கொண்டாட அன்னையாகிய தன்னை விட்டுவிட்டுச் செல்கின்றார்களே..... என்ற வேதனைக் கண்ணீரா அது? இல்லை இல்லை. தன் குழந்தைகளுக்கு மகிழ்ச்சியைத் தந்துவிட்ட நிறைவில் பொங்கி எழுந்த ஆனந்தக் கண்ணீர் அது. அந்த தியாகம்தான் தாய்மை. இதைவிட பெண்களின் மாண்புயர எதை சுட்டிக்காட்ட முடியும். அன்னை மரியாவின் மாண்பு உயர்வடையக் காரணம் மீட்பர் இயேசுவைப் பெற்றெடுத்த தாய்மையல்லவா. பெண்மையைப் போற்றுவோம். அவள் தாய்மையை வணங்குவோம்.



**ரெஜினா கிரகோரி**

## செபிக்கின்றோம்

## இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 5. | சந்திரா பர்னாந்து | வர்க்கீஸ் | 01.02.2026 | பரிபூரண மாதா |
| 6. | லூக்காஸ் முறாயிஸ் | சகாயம் | 03.02.2026 | அந்தோனியார் |
| 7. | ஸ்டெபிலன் | தவசீலி செல்வம் | 20.02.2026 | தஸ்நேவிஸ் மாதா |
| 8. | ஜெரோம் | திரவியம் | 20.02.2026 | சவேரியார் |

# மகளிர் - மனிதர்களுள் மாண்புடையோர்

நாம் வாழும் இந்த பூமி, இயேசு பிறந்த பூமி. இயேசு வாழ்ந்த பூமி. இயேசு நடந்த பூமி (யோவா 17:20). "அவர்களுக்காக மட்டும் நான் வேண்டவில்லை. அவர்களுடைய வார்த்தையின் வழியாக என்னிடம் நம்பிக்கை கொள்வோருக்காகவும் வேண்டுகிறேன்" என்ற இயேசுவின் செபத்தோடு இக்கட்டுரைக்குள் நுழைவோம்.

(யோவா 2:4) "அம்மா" என்று இயேசுவால் அழைக்கப்பட்டவரும், (லூக் 1:42) "பெண்களுக்குள் ஆசீர் பெற்றவர்" என்று அழைக்கப்பட்டவருமான புனித மரியாவின் இனத்தைச் சேர்ந்தவர்கள்தான் பெண்கள்.

பெண்கள் எவ்வளவு மதிப்பிற்குரியவர்கள் என்றால் நாட்டை தாய்நாடு என்றும், மொழியை தாய்மொழி என்றும், நிலத்தை பூமித்தாய் என்றும் அழைக்கின்றோம். கலைக்கு உரியவள் கலைமகள் என்கின்றோம். பலாப்பழம் வெளிப் பார்வைக்கு அழகாக இருக்காது. ஆனால் அதன் உள்ளே உள்ள சுளைகள் சுவையாக இருக்கும். பலாப்பழங்களைப் போன்ற பெண்களும் உண்டு.

மறைவாகப் பூத்து மணக்கும் மனோரஞ்சிதம் எந்தப் புயலுக்கும் அசைவது இல்லை. எங்கும் மணம் பரப்பும். இது மலர்களுக்கு மட்டும் அல்ல. பெண்களுக்கும் இது பொருந்தும். பெண்கள் மனோரஞ்சிதமாக இருக்க வேண்டும் என்று மிக அழகாக எழுதி உள்ளார். மனோரஞ்சிதம் மலர்ந்து, மணம் பரப்பும் தன்மை உடையது. அறத்தின் வழி அவனியில் அறம் செய்து, துயர் நீக்கி, புதிய வானகத்தையும், புதிய வையகத்தையும் படைக்க மங்கையரால் முடியும். ஜெபம், அறம் என்ற இரு கருவிகள் மூலம் உலகை



எல்லாவித அடிமைத்தளைகளில் இருந்தும் மீட்க முயற்சிப்போம்.

பெண்கள் எப்பொழுது பேரழகியாகின்றார்கள்? பெண்கள் அநீதங்களை அகற்ற முற்படும்போதும், பசித் தீயை உணவு வழங்கி அணைக்கும்போதும், இரக்கம், பரிவு கொண்டவர்களாக மாறும் போதும் பேரழகியாகின்றார்கள். காவி உடை அணிந்து, கையில் அமுதசுரபியை ஏந்தி, ஏழைகளின் பசியைப் போக்கிய மணிமேகலை பேரழகியாகிறாள்.

உலகப் புகழ்பெற்ற பேரழகியான டயானா மனிதநேயத்தை மையமாகக் கொண்டு அன்புத் தொண்டாற்றிய அன்னை தெரசாவை சந்தித்தபின் புதுப்பிறவியானார்.



மனம் மாறினார். பேரழகியான டயானா தொண்டு உள்ளம் கொண்ட மாண்புறு மங்கையாகிறார்.

மங்கையராய் பிறப்பதற்கே - நல்ல

மாதவம் செய்திட வேண்டும் அம்மா என்று கூறும் கவிமணி தேசிக விநாயகம், பெண்களின் தலையாய பணி அறப்பணியே ஆகும் என்றார்.

கடற்கரைக்கு காற்று வாங்க போனோம் என்று மட்டும் இல்லாமல், கடலில் மூழ்கி முத்தெடுத்தோம் என்று நம் வாழ்வு அமைய வேண்டும். இவ்வுலக வாழ்வு பயனுள்ளதாக அமைய என்ன செய்வோம்? இவ்வுலக வாழ்வில் தேவையில் உள்ள மனிதனுக்கு உதவிக்கரம் நீட்டி மனிதநேயத்தைக் காப்பது, சக மனிதரை மதிப்பது தெய்வத்தையே மதிப்பதாகும். (வாசிக்க மத் 25:35-40).

இரண்டாம் வத்திக்கான் சங்கம் மகளிர்க்கு வழங்கியுள்ள செய்தியில் "அனைத்துலகின் பெண்மணிகளே, வரலாற்றில் மிக முக்கியத்தும் வாய்ந்த இத்தருணத்தில், உலகின் வாழ்வு உங்களிடமே ஒப்படைக்கப் பட்டுள்ளது. மனித பண்பாட்டை காப்பது, அவனியில் அமைதியை காப்பது உங்கள் கடனே" என்று கூறுகிறது.

உடைந்து உருக்கொடுத்த இறைவனை புரிந்துகொண்டதால், மாண்புயர் மங்கையர் ஆற்றிய அறப்பணியால் இவ்வுலகில் அமைதி, மகிழ்ச்சி, மனநிறைவு கிடைத்தும் மானிடர் யாவரும் இன்புற்றிருக்க வழி வகுக்கும்.

வாழ்க மங்கையர், வளர்க அவர்கள் பணி.

**சேவியர் அம்மாள் கோமஸ்**

---



# பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்

## தூத்துக்குடி

## தவக்காலத் திருநிகழ்வுகள் - 2026



### 1. சிலுவைப்பாதை

1. ஒவ்வொரு நாளும் திருப்பலி முடிவில் சிலுவைப் பாதை நடைபெறும். வாரநாள்களில் முதல் திருப்பலியின் முடிவிலும், ஞாயிற்றுக்கிழமைகளில் இரண்டாம் திருப்பலியின் முடிவிலும் நடைபெறும்.
2. ஒவ்வொரு வெள்ளியும் அதிகாலை 04.30 மணிக்கு பேராலய வளாகத்தில் சிறப்பு சிலுவைப் பாதை நடைபெறும்.
3. ஒவ்வொரு வெள்ளியும் மாலை 04.30மணிக்கு பேராலயப் பங்கின் பக்த சபையினர், இயக்கத்தினர் வழிநடத்தும் சிலுவைப்பாதையும், 07.00 மணிக்கு அன்பியங்கள் வழிநடத்தும் சிலுவைப் பாதையும் பேராலயத்தில் நடைபெறும்.

### 2. திருச்சிலுவை சிற்றாலய வழிபாடு

1. செவ்வாய்தோறும் திருச்சிலுவைச் சிற்றாலயத்தில் தவக்கால நற்செய்தியும், திருப்பலியும் நடைபெறும்.

### 3. ஞாயிறு சிறப்பு நிகழ்வுகள்

1. 08.03.2026 - தவக்காலத் திருப்பயணம் நடைபெறும்.
2. 2703.2026, 28.03.2026, 29.03.2026 மாலை 06.00 மணிக்கு திரு இருதயங்களின் பேராலய வளாகத்தில் மறைமாவட்ட அளவிலான தவக்கால நற்செய்திக் கூட்டம்.
3. 22.03.2026 மாலையில் 04.30 மணிக்கு ஆயர் தலைமையில் திவ்விய நற்கருணை ஆசீர் நடைபெறும். தவப் பவனி நமது பேராலயத்தில் தொடங்கி, திரு இருதயங்களின் பேராலய வளாகத்தில் நிறைவுபெறும்.

### 4. புனித வார நிகழ்வுகள்

1. ஏப்ரல் 02,03,04 (பெரிய வியாழன், பெரிய வெள்ளி, பெரிய சனி) புனித வாரத் திரு நிகழ்வுகள் புனித சவேரியார் மண்டபத்தில் நடைபெறும்.





# விவிலியப் போட்டி 131

தயாரித்தவர் :
*சகோ. பிரகாசி FBS*

**மத்தேயு நற்செய்தி அதிகாரம் 16 முதல் 20 வரை**

**விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக**

**யார் யாரிடம் கூறியது?**

1. ஆண்டவரே எங்கள் கண்களை திறந்தருளும் என்று யார் யாரிடம் கேட்டார்கள்.
2. ஆண்டவரே நாம் இங்கேயே இருப்பது நல்லது என்று யார் யாரிடம் கூறியது?
3. போதகரே நிலை வாழ்வை பெற்றுக் கொள்வதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று யார் யாரிடம் கேட்டது?
4. நீர் மெசியா வாழும் கடவுளின் மகன் என்று யார் யாரிடம் கூறியது?
5. விண்ணரசில் மிகப்பெரியவர் யார் என்று யார் யாரிடம் கேட்டது?
6. உங்கள் நம்பிக்கைக் குறைவு தான் காரணம் என்று யார் யாரிடம் கூறியது?
7. பரிசேயர் சதுசேயரின் புளிப்பு மாவை குறித்து கவனத்தோடு எச்சரிக்கையோடும் இருங்கள் என்று யார் யாரிடம் கூறியது?
8. மனிதரால் இது இயலாது ஆனால் கடவுளால் எல்லாம் இயலும் என்று யார் யாரிடம் கூறியது
9. உங்கள் போதகர் இரண்டு திராக்மா வரியை செலுத்துவது இல்லையா என்று யார் யாரிடம் கேட்டது?
10. மானிட மகன் யார் என்று மக்கள் சொல்கிறார்கள் என்று யார் யாரிடம் கேட்டது?

## விவிலியப் போட்டி 130

**பிப்ரவரி 2026** — *விடைக்குறிப்புகள்*

**மத்தேயு நற்செய்தி அதிகாரம் 11 முதல் 15 வரை**

| | | |
|---|---|---|
| 1. | கானானியப் பெண் | 15:22 |
| 2. | தம் சீடர் பக்கம் | 12:49 |
| 3. | யோவானைப் பற்றி | 11:7 |
| 4. | ஏரோது | 14:1 |
| 5. | ஓய்வு நாள் | 12:8 |
| 6. | அதன் கனியும் | 12:33 |
| 7. | மனிதருக்கு | 12:12 |
| 8. | வாயிலிருந்து | 15:11 |
| 9. | கடுகு விதை | 13:32 |
| 10. | கனிவும், மனத்தாழ்மையும் | 11: 29 |

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.03.2026**

## உங்கள் கவனத்துக்கு

பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளைத் தாளில் எழுதி பங்கு அலுவலகத்துக்கு யார் மூலமாவது கொடுத்து விடுங்கள். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். மறவாமல் குடும்ப அட்டை எண்ணையும் எழுதுங்கள். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம். பெயர் எழுதப்படாத விடைத்தாள்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.



**63831 98510**
(வாட்ஸ் அப் மட்டும்)

அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

**இந்த எண்ணுக்கு வரும் விடைகள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படும். பழைய எண்ணுக்கு அனுப்பப்படும் விடைகள் நிராகரிக்கப்படும்.**

**வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.**

*குறிப்பு : ஒரே கையெழுத்தில் இரண்டு மூன்று பதில் தாள்கள் அனுப்பி இருந்தால் வேறு வேறு பெயர்களில் இருந்தாலும் அவற்றில் ஒன்று மட்டுமே வெற்றி பெற்றதாக எடுத்துக் கொள்ளப்படும். இச்செயலைத் தவிர்க்கவும்*



**சரியான விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 243**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 130**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. அன்னை தெரசா அன்பியம் — **ரெய்ஸா சுஜய்**
2. அன்னை வேளாங்கன்னி அன்பியம் — **மிஷல் மிரல்**
3. கிறிஸ்தரசர் அன்பியம் — **செலஸ்கி கிளமென்ட்**
4. தஸ்நேவிஸ் மாதா அன்பியம் — **சுரேஷ் பிரேமா**

## பாராட்டுக்குரியவர்கள் : 126

**அந்தோனியார் அன்பியம்**
5. பிருந்தா
6. ரீனா மொறாயிஸ்
7. ஜெயா
8. லீனா கருணா
9. ஜெசி
10. சரோஜா மஸ்கரனாஸ்

**அன்னை தெரசா**
11. ஜூலியட்ஸ் ரூபி

**அன்னை வேளாங்கன்னி**
12. டென்சி
13. கவாஷினி ஆல்வின்
14. குரூஸ் ஷாலினா
15. ஜெரினா செல்வம்
16. நான்சி
17. பிரவீனா ரவிக்குமார்
18. அலைனா சந்தலேனா
19. லிசியா ஜெகதீஷ்

**கிறிஸ்தரசர்**
20. ரெக்ஸ் கிரீன்வெல்
21. லூரட் வசந்த்
22. ஜாய் ரோச்

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
23. சுகன் மோனிஷா
24. அஸ்கேனியஸ் அந்தோணிசாமி
25. ராஜா ஜரின்
26. ஆண்டரியா

**திவ்ய பாலன் அன்பியம்**
27. சகாயராணி தனராஜ்
28. ஸ்டார்லக் ஏஞ்சலின்
29. சென்சிலா சகாயராஜ்
30. பிரின்சி

**பாத்திமா மாதா**
31. சுகந்தா ஸ்டெனி
32. பிச்சம்மாள்
33. அனு ஆல்வின்
34. ஸ்டெபி ரீகன்
35. ரீனா ராஜா
36. லிண்;டாசீலன்
37. புளோரின் ஜீவிதா

**இரக்கத்தின் மாதா**
38. இருதயம்மாள் கொன்சால்
39. சேவியர் அம்மாள் கோமஸ்
40. பிரைட்டன் ஜெரோபின்
41. சித்ரா மோத்தா
42. பாப்டிஸ்டா
43. செல்வி புரோ
44. சகாயராணி

**ஜெபமாலை மாதா**
45. சகாயம்மாள் பெனடிக்ட்
46. கல்யாணி செல்வராஜ்

**ஜூடு அன்பியம்**
47. கிறிஸ்டோ ஜெபினா
48. டெரன்சியா அரிஸ்டோ

**காவல் தூதர்**
49. ஜோ டரினிஷா
50. ஜூலியஸ் தல்மேதா
51. அல்பின்
52. ரஸ்கின் வசந்தா
53. செல்வராணி
54. சார்லட் பிராங்
55. சாந்தி ஆல்ட்ரின்
56. எலிஜா இம்மானுவேல்
57. வெனிட்டாள்
58. ஜெயா அகஸ்டின்
59. பிரிசில்லா

**குழந்தை தெரசா**
60. பெர்லி டென்சன்
61. கிறிஸ்டி லிஸ்டன்
62. பெனி முறாய்ஸ்

**குழந்தை இயேசு**
63. மோனிகா செபஸ்டின்
64. எமல்டா
65. சுகிர்தா
66. பிரான்சிஸ் வாஸ்

**மணல் மாதா**
67. ரொசாரி கோமஸ்
68. வெர்ஜினியா
69. லீமாரோஸ் ஜாய்

**லூர்து மாதா**
70. ஆலிவர் வி. ராயர்
71. ஜெனோ சேவியர்
72. ரோஸ்லின் தாமஸ்
73. பிலோ கோமஸ்
74. ரஜூலா ஜான்போஸ்கோ
75. சாண்டினா

**மிக்கேல் அதிதூதர்**
76. ஜோஸ்பின் பர்னாந்து
77. வினோ அந்தோணி

**பனிமய அன்பியம்**
78. சுரேஷ் ஆனி
79. ஜாக்குலின் வினோதினி
80. ராணி
81. ஜூடு ரதி
82. அந்தோணிசாமி
83. மெர்சி

**பவுலடியார்**
84. ஒபிலியா தாமஸ்
85. ராஜா ரோஸ்லின்

**பரிபூரண மாதா**
86. சப்னா கினிஸ்டன்

**பொம்பெய் மாதா**
87. இம்மாக்குலேட் சதீஷ்
88. லூடா கான்ஸ்டன்
89. அண்டோ எஃபினா
90. தெரசா பிரகாஷ்
91. டிரைபேனா
92. மேத்யூ கர்டோசா
93. சித்ரா அலாய்
94. டிஃபானி அண்டோ
95. ஸ்னோ ஆல்பிரிக்
96. ஜான்சிராணி அமல்ராஜ்
97. பெலிக்ஸ் சோபியா

**இராயப்பர்**
98. டெய்ஸி
99. நேவிஸ் அம்மாள்
100. போஸ்கோ ரெனோ

**சவேரியார்**
101. டெலிலா அமலன்
102. அனுஷியா பீட்டர்
103. வினிஸ்டா ஷெரின்
104. ஜோஸ்பின் வில்மா
105. ஜோர்னல் ஜென்ஸி
106. ஜான்சி ஜெயக்குமார்
107. ஜஸ்மிலின்

**செபஸ்தியார்**
108. ஜெஸிலா சேவியர்
109. அந்தோனியம்மாள் டென்சிங்
110. பிரவீனா

**சிந்தாயாத்திரை மாதா**
111. ஜூடி ஆரோக்கியராஜ்
112. டோனஸ் ராயன்
113. லாசர் செல்வி
114. நேசம்

**சிறுமலர் அன்பியம்**
115. எல்சிட்டா ஆனந்தன்
116. விஜிலியா
117. தாயம்மாள்
118. விஜி சகாயராஜ்

**சூசையப்பர்**
119. ஹேமலதா சேவியர்
120. மென்சி
121. சவுமியா ஆல்டமென்
122. ஜெனி
123. ஜேக்குலினா
124. கிறிஸ் ரீஜோ

**திருச்சிலுவை**
125. ஜஸ்டின் ஸ்நோகுளோரி
126. ரமணி டிவோட்டா
127. ஆரோன் ஷாரோன்
128. சரோலின் கில்டன்

**வியாகுல மாதா**
129. லூர்து லினட்
130. ஜெரிஷா

## பிற பங்குகளிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 113

**பரிசு பெறுபவர்கள் : 4**

131. சென்னை — **பிரேமா குணசீலன்**
132. ஆலந்தலை — **மரியம்மாள்**
133. அந்தோணியார் கோவில் — **டயானா வினோத்**
134. காந்தி நகர் — **ரமேஷ் நர்மதா**

## பாராட்டுக்குரியவர்கள் : 109

**சென்னை**
135. ரெஜினா கிரகோரி
136. மேமா ஸ்டீபன்
137. கமலஜோதி ஜெயசீலன்
138. ஆண்டனிகா ஷெர்லி
139. கனிஷியஸ் விஷால்

**கொடைக்கானல்**
140. ஜெஸிந்தா மார்ட்டின்

**மதுரை**
141. சகோ. ஜான்சிமேரி
142. ஜெஸிந்தா மேரி

**திருச்சி**
143. ஜான்ஸி ராணி
144. மோனிட்டா கிறிஸ்டி
145. மேத்யூ விவேக்
146. லியோனாஜெக ரட்சகன்
147. டோனி
148. பிரின்ஸ் ஜெரோம்

**புன்னைக்காயல்**
149. ஜோஸ்னா

**ஆறுமுகநேரி**
150. ஜெயராணி
151. தொம்மை அந்தோணி

**ஆலந்தலை**
152. பொன்சேகா தங்கராஜ்
153. சகாயராணி

**தருவைக்குளம்**
154. மைக்கேல் ஸ்டிபானி
155. லில்லி சோபியா
156. ஜோஸ்பின் ஷீலா

**திருப்பூர்**
157. ததேயூஸ் கரோலின்
158. பிரான்சிஸ் ஆர்லன்

**தேனி**
159. சூர்யா அன்பு
160. குழந்தை திரேஸ்
161. ரோசாரியோ மேரி ஈவ்லின்

**புதியம்புத்தூர்**
162. ஹெலன் அன்னமனி

**கயத்தார்**
163. அமல்ராஜ்

**திண்டுக்கல்**
164. ரோசாலி
165. பாத்திமா மெர்லின்
166. ஜெர்மேன்

**கடலூர்**
167. ஹென்றி தாஸ்

**வீரபாண்டியபட்டணம்**
168. ரேச்சல் ராயன்

**உவரி**
169. ஆர்லின் ஈவ்லின்

**உடன்குடி**
170. ஸ்நோவின்
171. கிருபா
172. ஸ்னோ வெண்பா

**பரமக்குடி**
173. சைமன் சாந்தி

**சூலூர்**
174. சத்யா சேவியர்

**திருநெல்வேலி**
175. மெர்லின் ரோஸி

**ஏரல்**
176. இன்ஃபன்டா தினேஷ்
177. ஜாய்ஸ் ரத்னம்

**சங்கரன்கோவில்**
178. பிலேந்திரன்
179. செல்வமேரி

**சிவகாசி**
180. ஜெர்லின்

**பேட்டை**
181. ஹெலனிட்டா

**பராசூர்**
182. யாக்லின்

**உத்தமபாளையம்**
183. கரோலின் பிலோ

**<u>தூத்துக்குடி நகர பங்குகள்</u>**

**திரு இதயங்களின் பேராலயம்**
184. ரமோலா கமிலஸ்
185. டீனுராய் ஜேசுபாலு
186. ஸ்னோசன்
187. கிரேட்டா ராஜா
188. பீட்டர் ஜெயந்தி
189. ரிமோல்டா

**குருஸ்புரம்**
190. ஆசிர்வாதம்
191. பௌவுசி ஜோ மைக்கேல்
192. பிளாசி செல்வராஜன்
193. ஜான்சி மென்டிஸ்
194. மாசில்லா

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
195. சகாயம்
196. டார்லிமா அமுதன்
197. டோமினிக்
198. பேபின் ரால்ஃப்
199. சுகிர்தா

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
200. சலேத் எலிசா
201. செக்கரியா சாமுவேல்

**யூதா ததேயு கோவில்**
202. ஜூடி ரீத்தம்மாள் மேரி
203. ரோஸ் சேவியர்
204. இம்மானுவேல் சேகர்
205. சகாயமேரி
206. சகாயராஜ் ரொட்ரிக்ஸ்
207. லூர்து சுவிதா
208. ஜெனட் சேவியர்
209. ஆரோக்கிய சர்மிளா
210. ஷிர்லி
211. பாக்கியசீலி ஹெப்சி

**அந்தோணியார் கோவில்**
212. இருதயம்மாள் கபிரியேல்
213. வயோலா ஜான்சன்
214. மென்சிலாலொயோலா
215. ரீடன்
216. மகேஷ் சுஜாதா
217. பெஸ்டஸ் மச்சாடோ

**காந்திநகர்**
218. ரியாலினோ
219. கிளமென்சியா மேக்டன்
220. செலஸ்டின்
221. பிண்டன் சோபியா
222. சாந்தினி
223. பேபிவால்டர்
224. அன்சிட்டா

**அண்ணாநகர்**
225. வென்சி ராணி

**சார்லஸ் கோவில்**
226. சகாயிட்டா மச்சாது
227. ரூபி ஏஞ்சல்
228. அல்போன்சா பர்னான்டோ

**புனித இஞ்ஞாசியார் கோவில்**
229. சகோ. லோராமேரி
230. சூசை நெவின்
231. சகோ. மரிய சூசைரூபி
232. சகோ. ரூபல்லாமேரி
233. சகாய ஷீலா
234. பாத்திமா ஏஞ்சலின்

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
235. வெர்ஜின்
236. தயாபரராணி

**திரேஸ்புரம்**
237. கோல்வின் ஜேசுராஜ்
238. ஸ்நோ வெண்பா
239. கிருபா
240. ஆடன் ஸ்டேரீஷ்
241. அபின்ஷா

**பாத்திமா நகர்**
242. ஷர்மிளா ரமேஷ்
243. மேரி ஹம்லின்

**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 215**
**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 243**

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 20)

மார்ச் 2026

## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

### நிகழ்ந்தவை

- ★ **01.02.2026 ஞாயிறு முதல் 11.02.2026 புதன்** வரை வழிபாட்டு நிகழ்வுகள் **புனித லூர்தன்னை கெபியில்** வழக்கம் போல் நடைபெற்றது.
- ★ 10.02.2026 செவ்வாய் மாலை ஆராதனைக்கு **அருள்பணி. லூட்ரின்** அவர்கள் தலைமையேற்றார். மறுநாள் காலை 06.30 மணிக்கு **அருள்பணி. ரோலிங்டன்** அவர்கள் தலைமையில் திருவிழாத் திருப்பலி நடைபெற்றது. மாலை சப்பரப் பவனியும், திவ்விய நற்கருணை ஆசீரும் நடைபெற்றன. விழாவின் 11 நாள்களும் திரளான மக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு ஏழை எளியவர்களுக்கு உதவும் வகையில் காணிக்கைகளை கொடுத்தனர். பங்குத்தந்தை அவர்கள் நேர்ச்சைப் பொருள்கள் கொடுப்பதற்குப் பதிலாக ஏழைகளுக்கு பயன்படுகின்ற அரிசி போன்ற உணவுப் பொருள்கள் வழங்கியதற்காக மக்களைப் பாராட்டினார்கள்.
- ★ **02.02.2026 திங்கள் “ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்த விழா”.** அன்றுகாலை 06.15 மணிக்கு இரண்டாம் திருப்பலியின் தொடக்கத்தில் பேராலய வளாகத்தை சுற்றி மெழுகுதிரி பவனி நடைபெற்றது.
- ★ **08.02.2026 ஞாயிறு காலை 11.00 மணிக்கு அரசுத் தேர்வு எழுதவிருப்போருக்காக** சிறப்புத் திருப்பலி நடைபெற்றது. அத்திருப்பலியில் 10, 11, 12 ஆம் வகுப்பு அரசுத் தேர்வு எழுதுவோர் மற்றும் நீட், டெட் போன்ற அரசுப் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்வோர் பங்கேற்று அன்னையின் ஆசிரைப் பெற்றுச் சென்றார்கள்.
- ★ **13.02.2026 வெள்ளி மாலை 06.30 மணிக்கு** எஸ்கலின் திருப்பயணிகள் இல்லக் கண்காணிப்புக்குழு கூட்டம் நேவிஸ் அரங்கத்தில் நடைபெற்றது.
- ★ **18.02.2026 அன்று சாம்பல் புதனை முன்னிட்டு,** மூன்று திருப்பலிகளிலும் சாம்பல் பூசப்பட்டது.

  **22.02.2026 தவக்காலத்தின் முதல் ஞாயிறு** அன்று மாலை 04.30 மணிக்குப் பேராலய வளாகத்தில் சிறப்பு சிலுவைப் பாதையும் தொடர்ந்து திவ்விய நற்கருணை ஆசீரும் நடைபெற்றன.

### நிகழ இருப்பவை

- ★ 06.03.2026 மாதத்தின் முதல் வெள்ளி நோயாளர்கள், முதியோருக்கு இல்லங்களில் நற்கருணை வழங்கப்படும்.
- ★ 07.03.2026 மாதத்தின் முதல் சனி மாலையில் சப்பரப் பவனியும், நவநாள் வழிபாடும் நடைபெறும்.
- ★ 22.03.2026 ஞாயிறு மாலை 04.30 மணிக்கு மேதகு ஆயர் தலைமையில் தவப்பவனி நமது பேராலயத்தில் தொடங்கி திரு இருதயங்களின் பேராலய வளாகத்தில் நிறைவுபெறும்.





# பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்

தூத்துக்குடி

## புனித வாரத் திருநிகழ்வுகள் - 2026

### 29.03.2026 - திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு



காலை 05.00 முதல் திருப்பலி

காலை 06.15 புனித சவேரியார் மண்டபத்தில் குருத்தோலை மந்திரிப்பு, பவனி, பேராலயத்தில் திருப்பலி

காலை 08.15 மூன்றாம் திருப்பலி

காலை 09.30 நான்காம் திருப்பலி (ஆங்கிலம்)

மாலை 05.30 மாலைத் திருப்பலி

மாலை 06.30 திவ்விய நற்கருணை ஆசீர்

## புனித வாரம்

### 30.03.2026 - திங்கள்

காலை 05.30, 06.30 காலைத் திருப்பலிகள்

மாலை 05.30 மாலைத் திருப்பலி - தொடர்ந்து ஒப்புரவு அருள்சாதன வழிபாடு

### 31.03.2026 - செவ்வாய் - திருஎண்ணெய் அர்ச்சிப்புத் திருப்பலி

காலை 05.30, 06.30 காலைத் திருப்பலிகள்

மாலை 05.30 **மாலைத் திருப்பலி நடைபெறாது.** திரு இருதயங்களின் பேராலய வளாகத்தில் **மேதகு ஆயர்** தலைமையில் திரு எண்ணெய் அர்ச்சிப்புத் திருப்பலி நடைபெறும்.

### 01.04.2026 - புதன்

காலை 05.30, 06.30 காலைத் திருப்பலிகள்

மாலை 05.30 மாலைத் திருப்பலி - தொடர்ந்து ஒப்புரவு அருள்சாதன வழிபாடு

### 02.04.2026 - புனித வியாழன் - ஆண்டவரின் இராவுணவு

மாலை 06.00 பேராலய வளாகத்தில் திருப்பலி, பாதம் கழுவும் சடங்கு. திருப்பலி முடிவில் திவ்விய நற்கருணை இடமாற்றுப் பவனி நடைபெறும். தொடர்ந்து பேராலயத்தில் திவ்விய நற்கருணை ஆராதனை நடைபெறும்.



இரவு 08.00 - 08.30 சவேரியார், பவுலடியார் மண்டல அன்பியங்கள்

இரவு 08.30 - 09.00 அந்தோனியார், மணல் மாதா மண்டல அன்பியங்கள்

இரவு 09.00 - 09.30 பாத்திமா மாதா, அன்னை தெரசா மண்டல அன்பியங்கள்

இரவு 09.30 - 10.00 சூசையப்பர், இராயப்பர் மண்டல அன்பியங்கள்



**இரவு 10.00 – 10.30** செபஸ்தியார் மண்டல அன்பியங்கள்

**இரவு 10.30 – 11.00** கிறிஸ்து அரசர் மண்டல அன்பியங்கள்

**இரவு 11.00 – 11.30** பொது ஆராதனை

**இரவு 12.00** நகர வீதிகளில் **பெரிய சிலுவைப் பாதை** பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையினரால் நடத்தப்படும்.

## 03.04.2026 - புனித வெள்ளி - ஆண்டவரின் திருப்பாடுகள்



**காலை 05.00 முதல்** } அமைதியில் திவ்விய நற்கருணை சந்திப்பு.

**மாலை 03.00 வரை** } தனியாகவும், குடும்பமாகவும் ஆராதனை செய்யலாம்.

இன்று **உண்ணா நோன்பு** (ஒருசந்தி), **புலால் நோன்பு** (சுத்தபோசனம்) கடைப்பிடிப்போம்.

**காலை 11.30** பேராலயத்தை சுற்றி சிலுவைப் பாதை.

**மாலை 6.00** திருப்பாடுகளின் வழிபாடு

திருச்சிலுவை ஆராதனையின்போது பசி, பிணி ஒழிப்புக்காக, அறப்பணிக்காக தாராளமாக காணிக்கை செலுத்துங்கள்.

வழிபாட்டின் முடிவில் திருச்சிலுவை சிற்றாலயத்தில் ஆசந்தி சுரூபம் முத்தி செய்வதற்காக வைக்கப்படும்.

## 04.04.2026 - புனித சனி

இன்றைய நாள் முழுவதையும் அமைதியில் கழிப்போம்.

## உயிர்ப்புப் பெருவிழா (திருவிழிப்பு)

**இரவு 11.00 மணி** பாஸ்கா திருவிழிப்புத் திருப்பலி

திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பிக்க மெழுகுதிரி கொண்டு வாருங்கள்.

## 05.04.2026 - உயிர்ப்பு ஞாயிறு



**காலை 6.30 மணி** முதல் திருப்பலி

**காலை 8.00 மணி** இரண்டாம் திருப்பலி

**ஆங்கிலத் திருப்பலியும், மாலைத் திருப்பலியும் நடைபெறாது.**

**காலை 6.30 மணி** செபமாலை, உயிர்த்த இயேசுவின் திருவுருவப் பவனி, திவ்விய நற்கருணை ஆசீர்

## 06.04.2026 - உயிர்ப்பு திங்கள்

**மாலை 5.00 மணி** அனைத்து இல்லங்களும் பாஸ்கா நீரால் புனிதப்படுத்தப்படும்.

# விண்ணக வாழ்வின் 30ஆம் நாள் நினைவு

**21.03.2026**

“ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை மேலானது.” (சங்கீதம் 63:3)



பிறப்பு
12.07.1990

இறப்பு
20.02.2026

## T. சகாய ஜெரோம்

வயது : 35

ஆ! இனிய இயேசுவே
என்னுடைய நடுவராய் இராமல் என் இரட்சகராய் இரும்.
என்னுடைய கடைசி வேளையில் பச்சாதாபக் கள்ளனைப் பார்த்த
இரக்கக் கண்களால் என்னை நோக்கியருளும். ஆமென்.

இவ்வான்மாவுக்காக பர, அருள், திரி. மன்றாடுமாறு
அன்புடன் வேண்டி நிற்கும்
அம்மா, அப்பா
**T. ஆனந்தி - P. திரவியம்**
மற்றும் சகோதர சகோதரிகள், குடும்பத்தினரும் நண்பர்களும்

---

நினைவுத் திருப்பலி

**21.03.2026 - சனிக்கிழமை காலை 6.30 மணி**
**பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்**
**தூத்துக்குடி**

---

15, சவேரியா பிச்சை சந்து, பெரிய கோயில் காம்பவுண்ட், தூத்துக்குடி - 1.

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



**விண்ணில்**
**13.12.1971**

**மண்ணில்**
**08.03.2025**

## லூசியா . வி

என்னுயிரை தந்த என் தெய்வமே
என் உயிரை வளர்க்க உன்
உயிரை கரைத்தவள் நீ
என் பசியை போக்க
உன் பசியை மறைத்தவள் நீ
எனது மகிழ்ச்சிக்காக உனது
கவலைகளை மறந்தவள் நீ
எனது தனிமை நோய்க்கு
ஆறுதல் மருந்தும் நீயே!
எனக்கு உயிர் கொடுக்க
உன் உயிரை சிதைத்தவள் நீ

**பிரிவால் துயறுரும்**
அன்பு கணவர்: வினோத்.J
அன்பு மகள்: டெனிசா கிளாட்
பாளையங்கோட்டை

# நினைவு அஞ்சலி

"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன"
(ஞானம் 3:11)

10ஆம் ஆண்டு

மண்ணில் 15.11.1930

விண்ணில் 04.02.2016

வயது : 85



ஆறாம் ஆண்டு

மண்ணில் 03.04.1940

விண்ணில் 14.03.2020

வயது : 80

## S. ஜோசப்  J. சேவியரம்மாள்

- மகன்கள்

### 30ஆம் ஆண்டு

"நானோ, கடவுளின் இல்லத்தில் பச்சை ஒலிவமரக்கன்றுபோல் இருக்கின்றேன்"
(திபா 52:8)

## J. ஜெயந்தி M.A.

வயது : 32

30 ஆண்டுகள் கடந்தாலும்
நகர்வதில்லை உன் நினைவு!
அன்று மறைந்தாலும்...
இன்றும் வாழ்கிறாய்
எங்கள் நினைவுகளோடு!



மண்ணில் 02.07.1963

விண்ணில் 27.01.1996

மக்கள், மருமக்கள்,
பேரன், பேத்திகள்
மற்றும் குடும்பத்தினர்

## எங்களின் அன்பு தாய்க்கு
## 19வது ஆண்டு நினைவு



மண்ணில்
18.01.1922

விண்ணில்
18.03.2007

# C. டெய்சி கொரையறா

வயது : 85

கோடி உறவு அருகில் இருந்தாலும்
உன்னை மிஞ்சிய உறவேதும்
உலகில் இல்லை அம்மா!

**திருப்பலி**

18.03.2026 - காலை 6.30 மணி
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்
தூத்துக்குடி

விண்ணக வாழ்வின்

# ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

12.03.2026



பிறப்பு
20.10.1950

இறப்பு
12.03.2021

# A. அருள்சீலி பர்னாந்து

*வயது : 71*

என்மேல் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்

மகன் : A.சேசையா பர்னாந்து
மருமகள் : J.ஜெயஸ்ரீ பர்னாந்து
மகன் : A. ஜாய்சன்
மருமகள் : J.பமிலா

பேத்தி : J. ரேச்சல்
பேரன்கள் : J. ஜெசாந் பர்னாந்து
J. ஜெர்விந் பர்னாந்து
மற்றும் குடும்பத்தினர்

SHINY Ph : 98421 31493